TNVR090004622021

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், விருதுநகர்.
(சார்பு நீதிமன்றம், விருதுநகர்.)
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23ம் நாள் புதன் கிழமை
எம்.சி.ஓ.பி.எண். 40/2021

விருதுநகர் மாவட்டம், காரிசேரி பஞ்சாயத்து, மத்தியசேனை கிராமம், மேற்குத் தெரு எண்.3/17ல் குடியிருக்கும் முத்தையா என்பவரின் மகன், சுமார் 43 வயதுள்ள சின்னதம்பி.

... மனுதாரர்

/எதிர்/

1. மதுரை – 625 701, திருமங்கலம் தாலுகா, குராயூர் அஞ்சல், மகாவனத்தம், எண்.16 என்று முகவரியில் வசிக்கும் அய்யாவு மகன் மாணிக்கம்.

2. கிளை மேலாளர், யுனிவர்சல் சாம்போ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், முதல் தளம், எண்.10/20, பைபாஸ் ரோடு, மதுரை 625 010.

... எதிர்மனுதாரர்கள்

கடந்த 03.12.2020ம் தேதி மதியம் 02.20 மணியளவில் மத்தியசேனை – கன்னிசேரி ரோட்டில் மத்தியசேனை பேருந்து நிறுத்தம் அருகில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு ரூ.4,00,000/- கோரி மனுதாரரால் இம்மனு மோ.வா.சட்டம் 1988 பிரிவுகள் 140, 142, 166 உ/இ விதி 3(1)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | : | மோ.வா.வி.கோ.விதி u/s 24(1)ன் படி ரூ.850/- நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |
| மனு தாக்கல் நாள் | : | 04.01.2021 (கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்) |

மனு தாக்கல் நாள் : 15.09.2021 (சார்பு நீதிமன்றம், விருதுநகர்)

மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.40/2021 வழக்கானது முதலில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகரில் தாக்கல் செய்யப்பட்டு மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.12/2021 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் நடவடிக்கையின்படி D.No.1342 நாள். 17.08.2021ம் தேதிய உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மோ.வா.வி.கோ.தீ.மனு.எண்.40/2021 என எண்ணிடப்பட்டுள்ள இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 16.02.2023 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. விஜய் ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

## உத்தரவாணை

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. மனுவின் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை ரூ.3,29,300/−யையும், அத்தொகைக்கு மனு தாக்கல் செய்த நாளிலிருந்து (04.01.2021) செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் செலுத்த வேண்டும்.
3. 2ம் எதிர்மனுதாரர் இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் (22.10.2023) இந்நீதிமன்ற மோ.வா.வி.கோ.கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டும்.
4. 2ம் எதிர்மனுதாரரால் தொகை வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதாரர் முழு இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுகளை பெற்றுக்கொள்ளலாம்.
5. நீதிமன்ற கட்டணம் ஏதும் பாக்கி இருந்தால் இன்றிலிருந்து (23.08.2023) இரண்டு வாரங்களுக்குள் செலுத்த வேண்டும்.

6. நீதிமன்றக் கட்டணம் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தால் மனுதாரர் திரும்ப பெற்றுக்கொள்ளலாம்
7. வழக்கறிஞர் கட்டணம் ரூ.9,586/-
8. இம்மனுவின் செலவுத் தொகையை 2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கொடுக்க வேண்டும்.
(உபய தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23 ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

தீர்ப்பாய நீதிபதி/சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
எம்.சி.ஓ.பி.எண்.40/2021
உத்தரவாணை
நாள். 23.08.2023